**வரையறுக்கப்பட்ட ஶ்ரீ லங்கா யூத் சேவிசஸ் தனியார் கம்பனியி – 2017/2018**

வரையறுக்கப்பட்ட ஶ்ரீ லங்கா யூத் சேவிசஸ் தனியார் கம்பனியின் 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் மீதான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாமை**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைளின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், அரச கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், வ/ப ஶ்ரீலங்கா யூத் சேவிசஸ் தனியார் கம்பனியினால் 2017/2018 கணக்காண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் கணக்காய்விற்காக முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|---|
| (அ) | 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமை அதிகாரச்சட்டத்தின் 23.1(அ) பிரிவு | கம்பனியின் தகவல் உத்தியோகத்தர்களாக ஒரு உத்தியோகத்தர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையான மேன்முறையீடுகளை விசாரணை செய்வதற்காக பெயரிடப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கைசனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 103(1)ஊ பிரமாணம். | கம்பனியினால் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பு பணத்தை அனுப்பி வைப்பதிலான மற்றும் அறிக்கைகளை சமர்ப்பிப்பதிலான தாமதங்கள் காரணமாக மீளாய்வாண்டினுள் ரூபா 215,029 கூட்டுத்தொகையான மிகை அறவீட்டினை செலுத்த நேர்ந்திருந்ததுடன், அது தொடர்பில் மேற்படி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரச முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை. | |
| (i) | 4.2.2 ஆம் பந்தி | கம்பனியின் செயலாற்றலினை மதிப்பீடு செய்தல் மற்றும் தேவையான கட்டுப்பாடுகளை நிறுவுவதற்காக பணிப்பாளர் சபை மாதாந்தம் கூட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்தினுள் முறையே 05 சந்தர்ப்பங்களில் மற்றும் 03 சந்தர்ப்பங்களில் மாத்திரம் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. |
| (ii) | 9.2 பந்தி மற்றும் 9.3.1 ஆம் பந்தி | அனைத்து பொது முயற்சிகளுக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்று காணப்பட வேண்டியதுடன், பொது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டியதுடன், ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்த்தல் நடைமுறையானது மேறபடி திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் பணிப்பாளர் சபை மற்றும் உரிய அமைச்சுகளால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் அதன் பிரகாரம் செயற்பட்டிருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை. | தமது வியாபார நடவடிக்கைகளை குறுங்கால மற்றும் நீண்ட கால நோக்குடன் முகாமை செய்ய வேண்டியமையால், ஆகக் குறைந்தது மூன்று வருட காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் உத்தேச இலக்குகளை அடைந்து கொள்ளக்கூடிய முறையில் வியாபாரங்களை நடாத்திச் செல்லுதல் பணிப்பாளர் சபையின் முழுப் பொறுப்பான போதிலும், கம்பனிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியால் கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்ட கம்பனியின் ஆட்சேர்ப்பு நடைமுறை உரிய முறையில் அங்கீகரிக்கப்பட்டிராததுடன், அந்த நடைமுறையின் பிரகாரம் செயற்திட்ட முகாமையாளர் (சிற்றுண்டிச்சாலை) பதவிக்குரிய கல்வி, தொழில்சார் தகைமை அல்லது அனுபவத்தினை சான்றுபடுத்தும் சான்றிதழ்களின் பிரதிகள் அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோவையினுள் இல்லாதிருந்ததுடன், அந்த சான்றிதழ்களின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

அவ்வாறே, அந்த உத்தியோகத்தருக்கு எழுத்துமூல கடமைக் கையளிப்பொன்று இடம்பெற்றிராததுடன், அவரால் வரவுப் பதிவேட்டில் அல்லது கைவிரலடையாள இயந்திரத்தில் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், வருகை, வெளிச்செல்லல் மற்றும் மேற்கொண்ட பணிகள் தொடர்பில் சான்றுபடுத்தாது 2015 யூன் முதல் 2019 செப்தம்பர் வரையிலுமான காலப்பகுதிக்காக மாதமொன்றிற்கு ரூபா 32,500 படியாக ரூபா 1,690,000 தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடங்களில் பாதுகாப்பு சேவைப் பிரிவில் வருமானம் பொருண்மையான அளவினால் குறைவடைந்திருந்ததுடன், 2015/2016 கணக்காண்டிற்கு ஒப்பாக அது முறையே ரூபா 41,406,545 இனால் அதாவது 26 சதவீதத்தினால் மற்றும் ரூபா 26,496,258 இனால் அல்லது 17 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. 2015/2016 கணக்காண்டின் போது பாதுகாப்பு சேவைகளை வழங்கிய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 20 ஆக காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் போது அந்த வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 03 வரையிலும் குறைவடைந்திருந்தமை அதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்ததுடன், வருமானத்தினை அதிகரிப்பதற்கு சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் நடைமுறைகளை பின்பற்றுவததற்காக முகாமைத்துவம் கவனம் செலுத்தயிருக்கவில்லை.

மேலும், 2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் பாதுகாப்பு சேவைகள் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்த 06 நிறுவனங்களில் ரூபா 7,016,658 தொகையும், உடன்படிக்கையின்றி பாதுகாப்பு சேவைகளை வழங்கிள நபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து ரூபா 448,355 தொகையுமாக ரூபா 7,465,013 தொகை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதாக இருந்தது.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது தேசிய இளைஞர் சேவைகள் சபையிடமிருந்து கம்பனிக்கு கிடைத்திருந்த ரூபா 3,710,750 தொகையான 06 உணவுக் கட்டளைகளின் மற்றும் ரூபா 1,476,725 கூட்டுத்தொகையான 04 அச்சீட்டு கட்டளைகள் கம்பனியின் குறித்த பிரிவுகளினால் நிறைவேற்றப்படாது வெளிவாரி நிறுவனமொன்றினால் நிறைவேற்றிக்கொள்ளப்பட்டிருந்தது. அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவைகள் பின்பற்றப்படாது வெளிவாரி நிறுவனங்களுக்கு அந்த கட்டளைகள் முன்வைக்கப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் மிகவும் குறைந் அளவிலான இலாபம் ஈட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கம்பனியின் பிரதான வியாபார பிரிவுகள் உயரிய முறையில் பயன்படுத்தப்பட்டு இலாபத்தன்மையை அபிவிருத்தி செய்ய முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) வ/ப ஸ்ரீலங்கா யூத் சேவிசஸ் தனியார் கம்பனியை தாபிப்பதற்குரிய 1982 செப்தம்பர் 15 ஆந் திகதிய 331 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நோக்கமொன்றான ‘‘அரசின் சிக்கனத்தன்மையை பலப்படுத்தும் நோக்கில் நீண்ட கால கொள்கைகளின் அடிப்படையில் ஆக்கபூர்வமான முறையில் நிதியை முதலீடு செய்வதன் மூலம் இளைஞர்களுக்கு ஊழிய வேலைவாய்ப்புகளுக்கு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக்கொடுத்தல்’’ இனை முன்னுரிமைப்படுத்துவதற்காக இளைஞர்களுக்கு சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு உதவும் வகையில் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கா யூத் சேவிசஸ் கம்பனியை தாபிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், தாபிக்கப்பட்ட கம்பனியில் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களின் போதியளவான வருமானம் கிடைக்காத காரணத்தால் சபையின் மேற்படி நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக கம்பனி

ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பம் முதல் எவ்வித நிதி ரீதியான பங்களிப்பினையும் கம்பனிக்கு வழங்க முடியாதிருந்தது.

**3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

வ/ப ஸ்ரீலங்கா யூத் சேவிசஸ் தனியார் கம்பனியின் அமைப்பு அகவிதியின் 68.அ பிரிவின் பிரகாரம் கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளர் பதவி 2019 மார்ச் 02 முதல் 2019 நவம்பர் 07 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் வெற்றிடமாக காணப்பட்ட போது அந்த காலப்பகுதிக்காக மாதாந்த படிகள், எரிபொருள் செலவினம் மற்றும் தொலைபேசி படிகள் எனுமாறு ரூபா 336,740 கூட்டுத்தொகையான பதவி வெற்றிடமாக இருந்த காலப்பகுதிக்குரியதாக முன்னால் முகாமைத்துவ பணிப்பாளர் பதவி வகித்த உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**4. நிலைபேறான அபிவிருத்தி**

**நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்**

ஐக்கிய நாடுகள் சபையினால் 2030 ஆம் ஆண்டளவில் தமது அமைப்பிற்குரிய அனைத்து நாடுகளினதும் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக வளர்ச்சி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030'' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அது அனைத்து அங்கத்துவ நாடுகளினாலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய உலகளாவிய வெளிபடுத்தல் ஆகும். எவ்வாறெனினும், வ/ப ஸ்ரீலங்கா யூத் சேவிசஸ் தனியார் கம்பனியியால் தமது வியடப்பரப்பிற்கு உட்பட்ட நிறைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.